DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC.No. | : | 55/2017 |
| Deposition of Witness for | : | P.W. 10 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | அண்ணாதுரை |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.02.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கோயம்புத்தூர் குற்றப்பிரிவு குற்ற புலனாய்வுத்துறை காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.03.2015 ம் தேதி தேவகோட்டை தாலுகா, காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்றைய தினம் 12.45 மணிக்கு தேவகோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் சேகர் முனியப்பன் என்பவர் தேவகோட்டை தாலுகா காவல் நிலைய குற்ற எண்.112/2015 சட்டப்பிரிவு 436, 294(பி), 506(2) இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கையை என்னிடம் கொடுத்தார். நான் அவ்வழக்கை என் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு 13.30 மணிக்கு சென்று சாட்சிகள் ராமநாதன், பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7** ஆகும். பின்பு, சாட்சிகள் செல்வி, பூபதி, சுந்தரபாண்டி, காளியம்மாள், ராமநாதன், பாலசுப்பிரமணியன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. பின்பு, உதவி ஆய்வாளர் சேகர் முனியப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 03.03.2015ம் தேதி சாட்சிகள் வாசுதேவன், நாராயணன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 05.03.2015ம் தேதியன்று வழக்கின் எதிரியானவர் சிவகங்கை மாவட்டம், அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணைவு உத்தரவு பெற்றுள்ளார். கடந்த 27.04.2015ம் தேதி வழக்கில் என் விசாரணையில் எதிரி மீது குற்றச்சம்பவம் உறுதியானதால், எதிரி மீது சட்டப்பிரிவுகள் 436, 294(பி), 506(2) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் தொடர்பாக எதிரிக்கும், நிகழ்நிலை புகார்தாரருக்கும் இடையே ஏற்கனவே சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு முன்பே உரிமையியல் பிரச்சனை பற்றி சொன்னார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் சர்வே எண் பற்றி என்னிடம் சொன்னார்களா என்றால் சென்னார்கள் அது சர்வே எண்.47/6. அந்த சர்வே எண் தொடர்பாக அந்த சர்வே எண் நிகழ்நிலை புகார்தாரருக்குதான் பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் என்னால் பெறப்பட்டதா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் சர்வே எண்.47/6 ல் தான் நடைபெற்றது என்பதற்காக ஏதேனும் சான்றிதழ் எதுவும் கிராம நிர்வாக அலுவலரிடம் வாங்கி வைத்துள்ளேனா என்றால் இல்லை.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து எந்த பொருள்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை புகைப்படம் எடுத்துக்கூட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நிகழ்நிலை புகார்தாரர் தன்னை என்ன அசிங்கமான வார்த்தைகள் பயன்படுத்தி திட்டினார் என்றோ, தனது உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு கோரியோ புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, புகாரில் சொல்லியுள்ளார். சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ள இடத்திற்கும், முத்தூரணிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும். காவல் நிலையத்திற்கு தகவல் கிடைக்கும்

போது சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் வந்ததா அல்லது முழுவதுமாக முடிந்த பின்பு வந்ததா என்றால் முடிந்த பின்பு வந்தது.

3. தீயணைப்பு துறையினருக்கு தகவல் எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் நாங்களே அணைத்துவிட்டோம் என்று சொன்னார்கள். நிகழ்நிலை புகார்தாரரால் ஒரு சம்பவம் உற்பத்தி செய்யப்பட்டு, பொய்யாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததற்கும், எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் புகார்தாரருக்கும் சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சனை நிலுவையில் இருந்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. புகார்தாரர் எதிரிமீது உள்ள முன்கோபத்தின் அடிப்படையில் எதிரிமீது தாக்கல் செய்த சிவில் வழக்கினை மறைத்து, பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபரங்களை சரியாக நான் விசாரணை செய்யாமல் இந்த வழக்கை பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

4. சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்ட ஒவ்வொருவரும் புகார்தாரருக்கு உறவினர்களா என்றால் அனைவரும் உறவினர்கள் இல்லை, ஒருசிலர் மட்டும் உறவினர்கள். எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி விடுதலை செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஓம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.